3290

# வி. கோ.
# சூரியநாராயண சாஸ்திரியார்
## சரித்திரச் சுருக்கம்

"தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலிற் தோன்றாமை நன்று" — குறள்

PRESENTED BY:
V. PR. PL. M.
KASIVISWANATHAN CHETTIAR
PAGANERI.

வி. சூ. நடராஜ சாஸ்திரி

# வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார், பி. ஏ.,

(பரிதிமாற்கலைஞன்)
**(1870—1903)**

[சென்னைக் கிறிஸ்தவ கலாசாலைத் தலைமைத் தமிழ்ப் பண்டிதராயிருந்து காலஞ்சென்றவர்]

## சரித்திரச் சுருக்கம்

3290

போடிநாயக்கனூர், முனிசிபல் ஹெல்த் ஆபீஸரும் சூரியநாராயண சாஸ்திரியார் குமாரருமாகிய டாக்டர்

**வி. சூ. நடராஜ சாஸ்திரி, எல். எம். பி., எல். பி. எச்.,**

எழுதியது

PRESENTED BY
V. PR. PL. M. KASIVISVANATH
CHETTIAR TO
LIBRARY, PAGANERI

Y. M. C.
ASSOCIATION
PAGANERI.
பகனேரி

PRESENTED BY:
V. PR. PL. M.
KASIVISWANATHAN CHETTIAR
PAGANERI.

பிரசுரகர்த்தர்:
வி. சூ. சுவாமிநாதன்
மதராஸ், மதுரை, திருநெல்வேலி

பதிப்புரிமை] [விலை அணா 2

*First Edition—1939—2000 Copies*

The Jupiter Press, Madras.



V. G. Suriyanarayana Shastriy B.A.

பரிதிமாற்கலைஞன்

# முகவுரை

எந்தையார் ஸ்ரீ: வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியாரவர்களது சரிதையை அவரது நண்பர்களிடமிருந்தும் மாணாக்கர்களிடமிருந்தும் கேள்வியுற்ற பல குறிப்புகளிலிருந்து சுருக்கமாக எழுதியுள்ளேன். இதில் ஏதேனும் தவறுகளிருக்குமாயின் அன்பர்கள் எனக்கு அறிவித்து ஆதரிக்குமாறு வேண்டுகின்றேன்.

எந்தையாரது சரிதையை விரிவாக எழுத, அவரது மாணாக்கரும் உடனிருந்து உழைத்தவரும் அண்ணாமலை சர்வகலாசாலைத் தமிழாசிரியரா யிருந்தவருமாகிய ஸ்ரீ: ந. பலராமய்யர் அவர்கள் வாக்களித்துள்ளார். இது வெகு விரைவில் வெளிவரும். எந்தையாரியற்றிய நூல்களனைத்தையும் ஒரே தொகுதியாக வெளியிட உத்தேசம். எல்லாம் வல்ல இறைவன் அருள் பாலிப்பாராக.

போடிநாயக்கனூர்<br>வெகுதான்யஸு<br>மார்கழிமீ 3உ

இங்ஙனம்<br>வி. சூ. நடராஜன்

## மதுரை ஜில்லா, மதுரைத் தாலுகா, விளாச்சேரி கிராமம் கண்டரமாணிக்கம் பிரகச்சரணம் சாமவேதம் கௌசிக கோத்திரம், திராகியாயன சூத்திரம் பிராமணர்களின் வமிசாவளி

பூர்வத்தில் பிரயாக க்ஷேத்திரத்திலிருந்து இந்தத் தென் தேசத்திற்கு வந்த
அண்ணா தீக்ஷிதர் என்ற யக்ஞபுரீசுவர தீக்ஷிதர் (கூடஸ்தர்)

- கோவிந்த தீக்ஷிதர்
  - பரசுராம தீக்ஷிதர்
  - சூரியநாராயண தீக்ஷிதர்
    - நீலகண்ட தீக்ஷிதர்
      - சூரியநாராயண சாஸ்திரியார்
        - கோவிந்த சாஸ்திரியார்
          - சுந்தரேச சாஸ்திரியார்
            - கோவிந்த சிவா
            - சுப்பிரமணிய சிவா
            - பரமேஸ்வரன்
          - சூரியநாராயண சாஸ்திரியார் பி. ஏ.
            - நடராஜன்
              - சூரியநாராயணன்
            - சுவாமிநாதன்
- சோமேசுவர தீக்ஷிதர்
- சுந்தரேசுவர தீக்ஷிதர்
- வைத்தியநாத தீக்ஷிதர்



ஸ்ரீ: கோவிந்த சாஸ்திரியார்

(கோவிந்த சிவனார், மாங்குடி ஸ்ரீ: மணிய சிவனாரது பிரதம சீடர்)



ஸ்ரீ: வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியாரும்

அவரது மனைவி

ஸ்ரீமதி: முத்துசுப்பலக்ஷ்மியம்மாளும்

# வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார், பி. ஏ.

" தமிழ் சரசுவதியின் சிறந்த மறு தோற்றம், புத்துடையில் ஏற்படுவதற்கான அறிகுறிகள் காட்டும் நவீன நூல்கள் இரண்டைத் தவிர வேறென்றும் இருப்பதாக எனக்குத் தோன்றவில்லை.

" மனோன்மணீயம் " ஆசிரியர், சிறந்து விளங்கிய திரு. சுந்தரம் பிள்ளையவர்கள் நமது துரதிர்ஷ்ட வசத்தால் அதி விறைவில் மறைந்து விட்டனர்.

" ' தனிப்பாசுரத் தொகை—முதற் பகுதி' என்ற ஆக்கியோன் பெயர் குறிப்பிடப்படாச் சிறு நூல், நாம் மனமார எதிர்கொள்ளத்தக்க புதிய மரபினர் வருகையின் முன்னோடியாகத் தோற்றுகிறது. "

இது **போப்பையர்** கருத்து. போப்பையரைத் தமிழுலகம் நன்கறியும். அவர் ஓர் ஆங்கில மேதாவி; தமிழன்பிற் தலைசிறந்த மேனாட்டார். பள்ளிப் பாலரும் பயிலத் தக்கவாறு இவர் எழுதியுள்ள தமிழ் இலக்கணமே, தமிழ்க் கல்வியில் இவர்க்குள்ள ஆர்வத்திற்குத் தக்கசான்று பகரும். இவர் திருவாசகத்தை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளார். அம் மொழிபெயர்ப்பின் முகவுரையில் தான் முன்னால் எடுத்தாண்ட வாசகங்கள் வருகின்

றன. இவ்வாசகங்கள் முதன் முதலில் எழுதப் பட்டபோது, தனிப் பாசுரத்தொகை நூலாசிரியரின் பெயர் கனம் போப்பைய ரவர்கட்குத் தெரியாது. காரணம் அந்நூல் **பரிதி மாற் கலைஞன்** என்னும் புனைவுப் பெயரில் வெளியிடப் பெற்றமையே. தெரிந்தபின் அவர் எழுதிய குறிப்பு :—

"ஆக்கியோன் பெயர் இப்போது கிடைத்திருக்கிறது. இப்பாக்களை இயற்றியவர், சென்னைக் கிறிஸ்தவக் கல்லூரித் தலைமைத் தமிழ்ப் பண்டிதர், வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார், பி. ஏ."

## ஜனனம்

இத்தகைய உலகப் புகழ்பெற்ற சூரியநாராயண சாஸ்திரியார், பிரமோதூத வருடம் ஆனி மாதம் 25-ஆம் தேதி சித்திரை நட்சத்திரத்தில் (1870-ஆம் ஆண்டு ஜூலை மாதம் 7-ஆம் தேதி) **மதுரைமாநகருக்** கருகில் உள்ள **விளாச்சேரி** என்னும் கிராமத்திற் சாமவேத கௌசிக கோத்திரத்திற் பிறந்தார். இவரது தந்தையார் **கோவிந்த சிவனார்** என்பவர். இவர் சிவாநுபூதிச் செல்வராய் விளங்கிய **மாங்குடி ஸ்ரீ: சுப்பிரமணிய சிவனார்** அவர்களது பிரதம சீடர். சைவமதத்திலே சிறந்த பற்றுடையவர். யோகாப்பியாசம் செய்வதில் தேர்ந்தவர். வாயுஸ்தம்பனம், ஜலஸ்தம்பனம், அக்கினிஸ்தம்பனம் முதலியவை செய்து காட்டியவர். மாந்திரீகத்தில் வல்லவர். இன்னாரது இரண்டாவது குமாரரே சாஸ்திரியார். மூத்தகுமாரர் **சுந்தரேச சாஸ்திரியார்.**

## இளமை

சிறு வயதில் மிதமிஞ்சிய சுறுசுறுப்பும் துடுக்கும் உள்ளவரா யிருந்தனராம் எந்தையார். தமது தமயனரிடம் மிகுந்த பயபக்தி விசுவாசம் கொண்டிருந்தனர். பத்து வயது வரையில் தமிழ்ப் பள்ளியிற் பயின்று, பின் **பசுமலைக் கல்லூரியிற் சேர்ந்தார்.** தினந்தோறும் விளாச்சேரியிலிருந்து ஒரு மைல் தூரத்திலிருந்த பசுமலைக்கு நடந்தோ, போக்கு வண்டியிலேறியோ சென்று வந்தார். பசுமலையிற் கல்வி பயிலுங்கால், தமிழிற் சிரத்தைக் குறைவுள்ளவராயிருப்பது கண்ட தமிழாசிரியர் இவரைத் தண்டிக்க, இவர் ரோசங்கொண்டு அதுமுதல் தமிழைக் கருத்துடன் படிக்கலாயினர். அக்காலத்திலேயே இவர் எப்பொருளையும் நுட்பமாக ஆராய்ந்தறியும் இயல்பினராயிருந்தார்.

## மதுரை வாசம்

இதன் பின்னர் இவர் மதுரைமாநகர் சேர்ந்து ஜில்லா ஹைஸ்கூலில் கல்விபயில ஆரம்பித்தார். அந்நாளிலேயே சாஸ்திரியார் தம் தந்தையாரிடம் வடமொழியையும், கல்வியிலும் அறிவிலும் சிறந்து விளங்கிய தமிழ்வித்துவான் மதுரைச் **சபாபதி முதலியார்** அவர்களிடம் தமிழ் மொழியையும் நன்கு பயின்றார். சபாபதி முதலியாரவர்கள் வடமொழியும் ஆங்கில மொழியும் நன்கு கற்றவர். மதுரைத் துரைத்தன வித்தியாசாலையில் தமிழ் ஆசிரியராய் விளங்கி, உபகாரச் சம்பளம் பெற்று, பல மாணாக்கர்கட்கும் தமிழ் இலக்கண இலக்கியங்கள் போதித்

தனர். எந்தையார் இவரிடம் 1885-ஆம் வருடம் தமிழ்க் கல்வி கற்கப் புகுந்தனர். அப்பொழுது உடன் படித்தவர் இருபதின்மர். அதி தீவிர புத்தி யுடையார் ஆதலின் தமிழ், வடமொழி, ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் சிறந்த பயிற்சி பெற்றார். சொற்ப காலத்திலே தமிழ்மொழியிற் சங்கச் செய் யுட்களை ஆராய்ந்து இன்புறும் அறிவுவளம் படைத் தார். 'விளையும் பயிர் முளையிலே தெரியும்' என்ற முதுமொழிக் கிணங்க அந் நாளிலேயே விரைவாகக் கவிபாடும் ஆற்றல் பெற்றார். அப்பொழுது இவர் செய்த நூல் **மாலா பஞ்சகம்*** என்னும் சிறு தோத்திர நூலாகும்.

மதுரையிற் கல்விபயின்ற நாளிலேயே இவர் தேகப்பயிற்சிகளிலும் ஊக்கம் காட்டி உழைத்தார். கலாசாலையில் தேகப்பயிற்சி விளையாட்டுகளில் பல பரிசுகள் பெற்றார். மதுரை யானை மாவுத்தர் ஒரு வரிடம் சிலம்ப விளையாட்டும், மல்யுத்தமும் கற்றார். இவைகளிலும் பல பொற்பதக்கங்களும் பெற்றார். அக்காலத்திலேயே இவருக்கு மதுரை **சோமு முதலி யார்** என்ற தனவந்தரின் குமாரர் **விசுவநாத முதலி யார்** அவர்களுடன் நெருங்கிய நட்பு ஏற்பட்டது. நாளுக்குநாள் இவ்விருவரது நட்பும் வளர்பிறை யென்ன வளரலாயிற்று. இச்சமயம் சாஸ்திரியார் 1890-ஆம் ஆண்டில் சென்னைச் சர்வகலாசாலையா ரின் எப். ஏ., பரீட்சையில் முதன்மையாகத் தேர்ச்சி பெற்று, சேதுபதி மகாராஜா அவர்களது

---

* இச் செய்யுள்நூல் அகப்படவில்லை.



ஸ்ரீ: வி. சூ. நடராஜன்



ஸ்ரீ: வி. சூ. சுவாமிநாதன்



**வில்லியம் மில்லர், எம். ஏ.,**

எல். எல். டி., டி. டி., ஸி. ஐ. இ.,

தலைமை யாசிரியர், கிறிஸ்தவ கலாசாலை, சென்னை.


உபகாரச் சம்பளமும் பெற்றார். தமது நண்பரது ஊக்கத்தையும் கல்வி ஆக்கத்தையும் கண்ணுற்ற விசுவநாத முதலியாரவர்கள், சாஸ்திரியாரைச் சென்னைக்குத் தமது செலவிலேயே அழைத்துச் சென்று, சென்னைக் கிறிஸ்தவக் கல்லூரியில் பி. ஏ., வகுப்பில் சேர்த்தனர்.

## சென்னை வாசம்

அக்காலத்தில் கிறிஸ்தவக் கல்லூரித் தலைமை வகித்தவர் கல்விநலம் வாய்ந்த **மில்லர்** துரைமகனார் ஆவர். முதல்நாள் வகுப்பில் ஒவ்வொருவர் பெயரையும் வாசித்த மில்லர் துரையவர்கள், சாஸ்திரியாரது நீண்ட பெயரைக்கண்டு மயங்கி, "உமது பெயரை **மாற்றிக்கொள்ள முடியுமா?**" என்று சாஸ்திரியாரைக் கேட்க, அவர் "அப்படியே செய்கிறேன்" என்று கூறினராம். பின்னர் கல்லூரிக் குமாஸ்தாவிடம் சென்று, 'சூரியநாராயணன்' என்ற பெயரை 'சூரியநாராயண சாஸ்திரி' என்று மாற்றிவிட்டனராம். மறுதினம் வகுப்பில் துரையவர்கள் முன்னதைவிட நீண்ட பெயரைக்கண்டு ஆச்சரியமுற்று சாஸ்திரியாரை வினவ, அன்னார், "ஐயா! தாங்கள் எனது பெயரை **மாற்றச்** சொன்னீர்கள். அதன்படியே மாற்றிவிட்டேன்" என்று தைரியமாகக் கூறினாராம். இவரது தைரியத்தையும் புத்திக் கூர்மையையும் கண்டு வியந்த துரைமகனார், சாஸ்திரியாரது கல்வி அபிவிருத்தியிலும் சொந்த நன்மையிலும் ஊக்கம்காட்டி உதவிவந்தார். தம்மிடம் பயிலும் மாணவர்களிடம் அன்பும் ஆதரவும்

காட்டுவதில் மில்லர் துரைமகனுரை முந்துவார் யாரே உளர்! நிற்க,

1892-ஆம் ஆண்டில் சாஸ்திரியார் பி.ஏ., பரீட்சையில், தமிழ் மொழியிலும் வேதாந்த தத்துவ சாஸ்திரத்திலும் இவ் விராஜதானியில் முதன்மையாகத் தேர்ச்சி பெற்ருர். அதற்குரிய பாஸ்கர சேதுபதியவர்களது பொற்பதக்கத்தையும் பெற்ருர். அந்நாளில் யாழ்ப்பாணத்தைச் சார்ந்தவரும் தமிழ்க் கலையில் தேர்ந்தவருமாய் விளங்கிய **சி. வை. தாமோதரம் பிள்ளையவர்கள்**, சென்னைக் கோட்டையில் உயரிய உத்தியோகத்தில் அமர்ந்து, வேலையினின்று விலகிச் சென்னையிலேயே வசித்து வந்தனர். இவர் பல இலக்கண நூல்களைப் பதிப்பித்தவர். பி. ஏ., பரீட்சையில் தமிழ் மொழியில் முதன்மையாக விளங்கி, பாஸ்கர சேதுபதியவர்கள் பொற்பதக்கமும் பெற்ற ஒவ்வொருவரையும் அநேகமாய் இவரும் பரீட்சிப்பது வழக்கம். அவ்வாறே பிள்ளையவர்கள் சாஸ்திரியாரையும் அழைத்தனர். சாஸ்திரியாரும், தற்சமயம் ஹைகோர்ட்டில் உயரிய வேலையிலிருந்து உபகாரச் சம்பளம் பெற்றிருக்கும், தமது நண்பரான **ஆபதோத்தாரணய்யர்** அவர்களை உடன் அழைத்துச் சென்ருர். சென்றதும் பிள்ளையவர்கள் ஒரு மணி நேரத்திற்குரிய வினுப் பத்திரம் ஒன்று கொடுத்து, விடையெழுதப் பணித்தார். சாஸ்திரியார் விடை எழுதி முடித்ததும் பிள்ளையவர்கள் அன்றை மறுதினம் வருமாறு கூறினர். அவ்வண்ணமே மறுதினமும் இரு நண்பர்களும் சென்றனர். பிள்ளையவர்கள்,



ஜி. யூ. போப்பையர், எம். ஏ., டி. டி.,

தமிழ்ப்புலவர், கோதீர்த்தபுரிச் சர்வகலாசாலை, கோதீர்த்தபுரி.



ஸ்ரீ: மு. சு. பூர்ணலிங்கம் பிள்ளை பி. ஏ., எல். டி.,

முன்னீர்பள்ளம்.

"நும்முடைய தமிழ் வல்லமையை நான் நன்கு உணர்ந்தேன். ஆயினும் தங்களுடைய மொழி பெயர்க்கும் ஆற்றலும் கவி பாடுந் திறமையும் எவ்வாறுளதென அறிய அவாவுகின்றேன்" என்று சொல்லி, ஆங்கில மகாகவி *சேகப்பிரியர் இயற்றிய **வெனிஸ் வர்த்தகன்** எனும் நாடகத்திலுள்ள ஒரு கவியைத் தந்து, அதைத் தமிழில் கவி ரூபமாகவே அவர் முன்பாகவே பாடிக் கொடுக்கும்படி ஆணையிட்டார். சாஸ்திரியாரும் அவ்வண்ணமே, கீழ்க்கண்ட கவியை எழுதி பிள்ளையவர்கள் கைக் கண்ணிட்டனர்.

"கன்னலங் கனிந்த பாடற் காயக னல்ல னேனு(ம்)
இன்னிசை கேட்டு நெஞ்ச மிளகிடா திருப்பான் வஞ்ச
மன்னவர் துரோக மாதி மாபவஞ் செய்யத் தக்கா
னன்னவன் றனைநம் பாம லகற்றிட வேண்டுமன்றே."

The man that hath no music in himself,
Nor is not moved with concord of sweet sounds,
Is fit for treasons, stratagems and spoils;
The motions of his spirit are dull as night
And his affections dark as Erebus:
Let no such man be trusted.

(Merchant of Venice. Act. V. Scene I.)

இக் கவியைக் கண்டு ஆனந்தமுற்ற பிள்ளையவர்கள் சாஸ்திரியாருக்கு **திராவிட சாஸ்திரி** எனப் பட்டமளித்தனர். பின்னர் அவரது விடையையும் அரிய நடையையும் நிமிடத்தினிலே கவி பாடும்

* Shakespeare.

திறனையும் கண்டு வியந்து, தமிழ் நூற்குவியலொன்று பரிசளித்து, "இவ்விடைப் பத்திரத்தில் எழுதிய செந்தமிழ் நடையிலேயே புத்தகம் ஒன்று எழுத இயலுமோ?" என்று வினவினராம். சாஸ்திரியாரும் அவ்வாறே ஒரு நவீனம் எழுதுவதாக வாக்களித்து, அன்று முதலே **மதிவாணன்** என்னும் புதுவது புனைந்ததோர் செந்தமிழ்க் கதையை எழுத ஆரம்பித்தனர். அது சிறிது சிறிதாக **ஞானபோதினிப்** பத்திரிகைவாயிலாக வெளிவருவதாயிற்று. ஆனால் அப்புத்தகம், முற்றுப்பெறு முன்னமேயே பிள்ளையவர்கள் காலஞ்சென்றது வருந்தற்பாலது.

## தமிழாசிரியர் பதவி

இவ்வாறு பல புலவர் மதிப்பும்பெற்ற சாஸ்திரியாரவர்கள் 1893-ஆம் வருடம் பி. ஏ., பட்டம் பெற்றார். இவரது அருமையும் பெருமையும் அறிந்த மில்லர் துரைமகனார், இவரைத் தமது கல்லூரியிலேயே வேலைக்கு அமருமாறு கூறினர். தமிழ் மொழியிலும், வேதாந்த தத்துவத்திலும் சென்னை இராஜதானிக்கே முதன்மையாகத் தேர்ச்சி பெற்ற போதிலும் சாஸ்திரியார் வேதாந்த தத்துவ ஆசிரியர் வேலையை வேண்டாது, தமிழ்ப்பண்டிதர் பதவியையே ஏற்றுக்கொண்டது தன் தாய் மொழியிடம் கொண்ட அளவிறந்த அன்பினாலாகும்.

இந்நாள் தொட்டே சாஸ்திரியார் தமிழ்த் தாய்க்குப் பணிகள் பல செய்ய ஆரம்பித்தனர். பி. ஏ., வகுப்பு மாணவராய் இருக்கும் காலத்திலேயே **விவேக சிந்தாமணி** என்னும் தமிழ்ப் பத்திரி

கைக்கு பல சிறந்த கட்டுரைகள் எழுதி வந்தனர். தமிழ்ப் பண்டிதராய் அமர்ந்தது முதல் இவரது இயற்கைத் தமிழபிமானம் மிகவும் பெருகி, மேன்மேலும் தமிழ்ப் பாண்டித்தியம் பெற இவரைத் தூண்டியது. 1895-ஆம் ஆண்டில் கிறிஸ்தவக் கல்லூரித் தலைமைத் தமிழ்ப்பண்டிதர் காலஞ்சென்றார். சாஸ்திரியாரது போதன சக்தியையும், மாணாக்கர் மனங் கவரும் ஆற்றலையும், நுண்ணறிவையும் இனிது அறிந்த மில்லர் துரைமகனார், இவரைத் தம் கல்லூரித் தலைமைப் பண்டிதராக்கினர். 25-வயது நிரம்பு முன்னரே ஒரு பெரிய கல்லூரியில் ஒரு துறையில் தலைமை வகிக்கும் பேறு ஒருவர்க்கு வாய்த்ததென்றால், அது அவர் முயற்சியின் பயனே ஆமன்றோ? கல்லூரி வகுப்புகளிலே பிரசங்கம் செய்யுங்கால் தமிழைப் புறக்கணிக்கும் மாணவரும் ஆர்வத்தோடு முன்வந்து ஆசிரியர் சொல்வனவற்றைக் கேட்டுப் பயன்பெறுமாறு கலைபயிற்றினர் என்பது இவரது மாணவர் பலர் கூறிய உண்மைச் செய்தியாகும். தமிழ் மொழியிலுள்ள இனிய நலங்களைப் பலர்க்கும் பகிர்ந்துகொடுத்து இன்பம் துய்க்க விரும்பினர் நம் புலவர். தம் இல்லத்திற் சில மாணவரை அழைத்து, அவருக்கு இயற்றமிழ் பயிற்றினர். அங்ஙனம் பயின்றோர் **இயற்றமிழ் மாணவர்** என அழைக்கப் பெற்றனர். இவர்களுக்கு ஆண்டுதோறும் தனித் தமிழ்ப் பரீட்சை நடத்தி பரிசுகள் பலவும் வழங்கினர். "மெய் வருத்தம் பாரார், கைம்மாறு கருதார், தம் செவ்வி அருமையும் பாரார், தமிழ் வளர்ச்சி ஒன்றே கடப்பாடாக

பூண்டு உழைப்பார்" என்பதே அவருக்குக் கிடைத்த பெரும்புகழாம்.

இவரது இயற்றமிழ் மாணவருள், இவரது நிழல்போன்று இருந்து தமிழ் கற்றவர் சென்னை அரசாங்கத் தமிழ்மொழி பெயர்ப்பாளராய் இருந்து தற்போது உபகாரச்சம்பளம்பெற்றுள்ள **ராவ்சாகிப் சி. என். சரவண முதலியார்**, பி.ஏ., அவர்களே. 'ஆர்யா' பத்திராசிரியராயிருந்து மாணவர்க்கேற்ற பல நூல்களும் ஆங்கிலத்தமிழ் அகராதியும் எழுதியவருமாகிய **ஸ்ரீ: தி. அ. சுவாமிநாதய்யர்** அவர்களும், சிதம்பரம் அண்ணாமலைச் சர்வகலாசாலைத் தமிழ்ப் பண்டிதரா யிருந்துவந்த **ஸ்ரீ: ந. பலராமய்யரவர்களும்**, எந்தையாரது நிழல்போல் உடன் இருந்து பழகியவர்களே. எந்தையார் எழுதிய பல நூல்களையும், அவர் கூறிவர எழுதி வந்தவர் ஸ்ரீ: ந. பலராமய்யரவர்களே. இவரே தற்சமயம் எந்தையார் எழுதிய நூல்களுக்கு உரையும் எழுதி உதவியுள்ளார். இன்னும் இயற்றமிழ் மாணவர் குழாத்துள்ளிருந்து படித்தோர் பல விடங்களிலும் இருக்கின்றனர். பண்டிதை **அசலாம்பிகை** யம்மையாரும் இவரது தமிழ்த் தொண்டை வியந்து, இவருடன் ஒத்துழைத்தவரே. சென்னை இராஜதானிக் கல்லூரியில் வடமொழித் தலைமைப் புலமையும், பாஷைநூற் புலமையும் வாய்ந்த **ஸ்ரீ: தி. மி. சேஷகிரி சாஸ்திரியார்**, எம். ஏ., அவர்களும் எந்தையாரது ஆப்த நண்பரே.

**கைம்மாறு கருதாமை**

சாஸ்திரியார் பி. ஏ., வகுப்பில் பயிலுங்கால் அவரது நண்பர் விசுவநாத முதலியார் தமது குடும்



ஸ்ரீ: சை. ரெத்தினசெட்டியார்,

மதராஸ், ரிப்பன் அச்சுயந்திரசாலை சொந்தக்காரர்.



**ஸ்ரீ. தி. மி. சேஷகிரி சாஸ்திரியார்**, எம். ஏ.,

சென்னை இராஜதானிக் கலாசாலை வடமொழித் தலைமைப்புலமையும்

பாஷை நூற்புலமையும் ஒருங்கே முறைபெற நடாத்தியவர்.

பத்துடன் ஒரு வீட்டின் கீழ்ப்பாகத்திலும், மேன் மாடியில் ஓர் அறையில் சாஸ்திரியாரும் மற்ற அறைகளில் வீட்டின் சொந்தக்காரராகிய **செங்கல்வ ராய முதலியாரும்** வசித்து வந்தனர். அக்காலத்தில் இரவு வெகு நேரம் வரை ஊக்கத்துடன் படிக்கும் சாஸ்திரியாரைக் காட்டி, வீட்டுக்காரர் தமது மகனை யும் அவ்வாறு படிக்குமாறு ஊக்கினர். சாஸ்திரி யாருக்கும் தினந்தோறும் பாலும் பழமும் கொடுத்து உதவினர். அவ்வாறு ஊக்கப்பட்ட பிள்ளையே சரவண முதலியார். இவர் சாஸ்திரி யாரிடம் தமிழ் பயிலவேண்டுமென்று கேட்டபோது அவர் தமக்கு அவகாசமில்லையென்று கூறிவிட் டனர். அதுகேட்ட முதலியார் அன்று முழுவதும் வீட்டுக்குச் செல்லாமல் அங்கேயே இருந்துவிட் டனர். தமிழ் மொழியில் இத்துணை ஆர்வமுள்ள முதலியாரிடம் அன்புகொண்டு, தமக்கு ஏற்பட்ட அவகாசத்தின்போது பாடம் சொல்ல சாஸ்திரியா ரும் இசைந்தனர். ஒரு மாதமானபின் அம்மாதச் சம்பளத்தை முதலியார் அளிக்க முயன்றபொழுது, சாஸ்திரியார் கோபத்துடன், "யாம் தமிழ் மொழியை எவர்க்கும் விற்பதில்லை. இவ்வெண் ணம் உனக்கிருக்குமாயின் இனி நீ இங்கு வர வேண்டாம்" என்று கூறினராம். முதலியாரும் மன்னிப்புக் கேட்டுக்கொண்டாராம். தமிழ் மொழி பயில்வோரிடமிருந்து யாதொரு கைம்மாறும் சாஸ் திரியார் எதிர்பார்த்ததில்லை யென்பதற்கு இதுவே சான்று.


## தன்னலங்கருதாத் தகைமை

பின்னர் சரவண முதலியார் பி. ஏ., வகுப்பிற்கு கிறிஸ்தவக் கல்லூரியிலேயே சேர்ந்து பயிலலானுர். அவ்வமயம் சாஸ்திரியார் பி. ஏ., பரீட்சைக்கு தமிழ்ப்பரீட்சகராக விருந்தனர். சரவண முதலியார் சாஸ்திரியாரிடம் தமிழ்மொழி தனியே பாடங் கேட்டதால், பி. ஏ., பரீட்சையில் அவரே முதன்மையாகத் தேர்ச்சி பெற்று, பாஸ்கர சேதுபதி அவர்கள் பொற்பதக்கமும் பெறுவார் என்பது யாவரும் எதிர்பார்த்ததே. ஆயினும் அவரது நண்பரிற் சிலர், "சாஸ்திரியாரிடம் பாடம் கேட்பதாலும், சாஸ்திரியாரே பரீட்சகரானதாலும்தான், நீ முதன்மை பெறுவாய்" என்று கேலி செய்தனராம். அதுகேட்ட முதலியார் எந்தையாரை அணுகி, அவ்வருடம் அவர் பரீட்சகராய் இருக்கக்கூடாதென்றும், வேறு யாரையாவது நியமித்து, தாம் முதன்மை பெற்ருல்தான் அவருக்கும் பெருமையென்று கூறி வேண்டினராம். எந்தையாரும் சிறிதும் தயங்காது அவ்வாறே வாக்களித்து, மில்லர் துரைமகனுரிடம் கூறி, அவ்வமயம் கும்பகோணம் துரைத்தனக் கல்லூரியில் தலைமைத் தமிழ்ப் பண்டிதராயிருந்த **உ. வே. சுவாமிநாதய்யரவர்களைப்** பரீட்சகராக நியமிக்க ஏற்பாடு செய்தனராம். முறைப்படியே சரவண முதலியாரே முதன்மையும் பெற்ருர். தமக்கு வரும் பெரும் வருவாயைச் சிறிதும் கருதாது தன்னலம் மறுத்த சாஸ்திரியாரின் இச் செய்கையை இன்றும் அவர் மாணவர் போற்றுவர்.




நிற்பவர்: இடமிருந்து வலம்: முத்தையா முதலியார்; ஷண்முகம் பிள்ளை; சூரியநாராயணசாஸ்திரியார்; சுப்பிரமணிய ஆசாரி; பிரணதார்த்திஹர சிவனர்; ஸ்ரீநிவாஸ ஐயங்கார்; ராமசாமி ஐயங்கார்;

உட்கார்ந்திருப்பவர்: இடமிருந்து வலம்: ந. பலராம ஐயர்; சி. நா. சரவண முதலியார்; சருக்கை. கி. வரதாசாரியார்; ஜக்கராஜு. பி. வாசுதேவ பந்துலு; சருக்கை. கி. சுந்தராசார்லு.



வ. சு. ஷண்முகம் பிள்ளை



ராவ்பகதூர்: வ. சு. செங்கல்வராய பிள்ளை

( திருப்புகழ் பதிப்பாசிரியர் வ. த. சுப்பிரமணிய பிள்ளை அவர்கள் குமாரர்கள் )

## தமிழ்ப் பணிகள்

செந்தமிழ் நாட்டினர் பெரும்பயன் பெறுமாறு, **ஞானபோதினி** என்ற தமிழ் மாதப் பத்திரிகையை, தம் நண்பர் ஸ்ரீ: மு. சு. **பூர்ணலிங்கம் பிள்ளை** அவர்களோடு சேர்ந்து சாஸ்திரியார் நான்கு வருட காலம் நன்கு நடத்தினர். அப் பத்திரிகையில் வெளிவந்த விஷயங்கள், புதுமையும் பழமையும் கலந்து நல்லறிஞர் உள்ளத்தைக் கவரும் தன்மை வாய்ந்திருந்தன. சென்னைச் சர்வகலாசாலையிலே பெரிய வகுப்புகளின் பாட புத்தகக் கமிட்டியின் அக்கிராசனராகவும், தமிழ்ப் பரீட்சகராகவும் இருக்கும் சந்தர்ப்பம் அவருக்கு வாய்த்தது. மதுரைத் தமிழ்ச் சங்கத்திலும் அங்கத்தினராய்ச் சேர்ந்து தமிழ்த் தொண்டாற்றினர். தமது கல்லூரியில் மாணவர் நலத்திற்காக அமைந்த **திராவிட பாஷா அபிவிருத்தினி சங்கத்தில்** ஊக்கம் காட்டி உழைத்தார்.

## நூலாசிரியத் தன்மை

இடையிடையே கிடைத்த அவகாச காலங்களில் தமிழ்த் தெய்வத்திற்குப் புதுப் பணிகள் பல புரியலானர். தமது இயற்றமிழ் மாணவர்களையும் புதுப்பணிகள் புரிய ஊக்கினர். தமிழ் மொழியில் நாடக நூல்கள் இல்லையென்ற குறையை நீக்கக் கருதி **ரூபாவதி, கலாவதி, மான விஜயம்** என்னும் நாடக நூல்களை இயற்றினர். இவ்வாறு நாடக நூல்களை எழுதப்புகுந்த ஆசிரியர், அவை அமைதற்குரிய இலக்கண நூல் ஒன்றும் முறைப்படத் தமிழ்மொழி

யில் இல்லாமையால், **நாடகவியல்** என்றதோர் புதுமைச்சூத்திர நூலை இயற்றி 1901-ஆம் வருஷத்திலே வெளியிட்டார். இந்நாடகவியல் முறைப்படியே தமது நாடகங்களையும் எழுதினர். அவற்றுள் **மான விஜயம்** செய்யுள் நடையில் ஓர் அங்கத்தில் வாய்ந்தது. **'களவழி நாற்பது'** என்னும் நூலையும், **'குழவி யிறப்பினும்'** என்னும்தொடக்கத்துப் புறப்பாட்டினையுமே ஆதாரமாகக் கொண்டு எழுதப்பட்டது. **ரூபாவதி**, செய்யுளும் பாட்டும் கலந்த வசன நாடகம். **கலாவதியும்** செய்யுளும் பாட்டும் கலந்த வசன நாடகமே. தமிழ்ப் பாவகை யனைத்துமே இதில் சேர்த்திருக்கின்றார். இந்நாடகத்தை **பாஸ்கர சேதுபதி** யவர்களுக்கு உரிமை செய்யுங்கால் அவர், இந்நூலில் நிரோட்டகம் என்ற வகைப்பா இல்லையெனக்கூறி, அதையும் சேர்க்குமாறு கூறினர். சாஸ்திரியாரும் உடனே கீழ்க்கண்ட பாடலை எழுதி அச்சபையிலேயே வாசித்துக் காண்பித்தனராம்.

"செய்யா யினியநலஞ் சேரரசர் சீராளா
கையா லெனைத்தழீஇக் காதலியே யென்றழைத்த
ஐயா தகை யேய்ந் தழகார்ந்தா யென்றைக்கே
நையாநிற் கின்றே னனி"

தாம் எழுதிய **ரூபாவதி, கலாவதி** நாடகத்தில் தாமே கதாநாயகிகளாகிய ரூபாவதி, கலாவதி வேடம் புனைந்து வித்வந் மனோரஞ்சநீ சபையில் நடித்தனராம். எனவே சாஸ்திரியார் நடிப்புத் திறமையிலும் மேம்பாடுள்ளவராம்.

**பரிதி மாற் கலைஞன்** என்னும் புனைவுப் பெயரில் **தனிப்பாசுரத்தொகை** யென்ற சிறிய அகவற் பாக்களா

லாகிய நூலை எழுதினர். இதனை *கோதீர்த்தபுரிச் சர்வகலாசாலைத் தமிழ்ப் புலவர் டாக்டர் **ஜி. யூ. போப்** துரைமகனார் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்ததுமன்றி, அவ்வமயம் சென்னை கவர்னராய் வந்த மேன்மைதங்கிய **பாரன் ஆம்ப்தில்** பிரபு அவர்களிடத்திலும் எந்தையாரைப் பற்றிச் சிறப்பித்துக் கூறினராம். அதுபற்றியே எந்தையாருக்கு கவர்னர் அவர்களது பேட்டி கிடைத்தது. பின்னர் வெளியிடப்பட்ட டாக்டர். ஜி. யூ. போப் துரைமகனாரது ஆங்கில மொழிபெயர்ப்புடன் கூடிய தனிப்பாசுரத் தொகைப் புதுப்பதிப்பு கவர்னர் துரையவர்களுக்கே உரிமை செய்யப்பட்டுள்ளது.

**பாவலர் விருந்து** என்னும் பாநூலையும் சாஸ்திரியார் எழுதி வெளியிட்டார். "சாஸ்திரியார் சில சமயங்களில் தாம் செந்தமிழ் நூல் பலவற்றையும் ஆராய்ந்துவரும் பொழுது தமக்கு ஏதேனும் ஐயந்திரிபறியாமையால் இடர்ப்பாடு நேர்ந்துழித் தமது 'பாவலர் விருந்தின்' கண் அடங்கிய பதினான்கு பகுதிகளுள் முதலாவதாகிய **மணிய சிவனார் கலிவெண்பா**வை ஒருமுறையோதிய பின்னர் உறங்கப்போவதும், துயிலுகையில் ஸ்ரீ மணிய சிவனார் கனவில் எழுந்தருளி அவ் விடர்ப்பாடுகளனைத்தையும் நீக்கி அருளுவதால் துயிலுணர்ந்த பின் யாவும் தெளிவாய் உண்மை விளங்கப் பெறுவதும் உண்டென்று பன் முறையும் அவருரைப்பதுண்டு" என்று அவருடைய மாணவரில் ஒருவரே சொல்லுவர். காலஞ்

---

* Oxford

சென்ற சி. வை. தாமோதரம் பிள்ளையவர்களின் வேண்டுகோளின்படி இனிய செந்தமிழ் நடையில் இயன்ற **மதிவாணன்** என்னும் புதுவது புனைந்ததோர் செந்தமிழ்க் கதையையும் எழுதி வெளியிட்டார். **தமிழ் மொழியின் வரலாறு** என்ற ஆராய்ச்சி நூலும் இன்றும் பல புலவராலும் போற்றப்படுகின்றன. மேனாட்டு முறையில் புதிய துறையில் தமிழ்மொழி ஆராய்ச்சி செய்யப்பட்ட நூல் இதுவேயாகும். தம் தந்தையாரனுமதியின்படி மாங்குடி **மணியசிவனார் சரித்திரம்** என்னும் ஒரு நூலையும் எழுதினார். இவர் **ஞானபோதினி, விவேக சிந்தாமணி** முதலிய பத்திரிகைகளுக்கு எழுதியவைகளை, **தமிழ் வியாசங்கள், தமிழ்ப் புலவர் சரித்திரம்** என்ற நூல்களாக, இவரது இரண்டாம் குமாரர் மதுரை ஸ்ரீ: **வி. சூ. சுவாமிநாதன்** வெளியிட்டுள்ளார். வேறு பல நூல்கள் செய்தனராயினும் அவை உரிய காலங்களில் வெளிவராமையால் மறைந்தன. இவர் எழுதிய **முத்திரா ராட்ஸசம்** என்னும் நாடகத்தின் சில காட்சிகள் மாத்திரம் அகப்பட்டுள்ளன.

## இறுதிக் காலம்

தமது தேகத்தில் ஏற்பட்டிருந்த க்ஷயரோக வாதையையும் கருதாது தமிழ்த் தாய்க்குத் தொண்டு புரிந்து, தமது உயிரையே தமிழ் மொழிக்காக சாஸ்திரியார் தியாகம் செய்தனர் என்று அவர் தம் மாணாக்கர்கள் இன்றும் கூறுகின்றனர். மரணம் நிச்சயமென்றுதெரிந்த காலத்தும் அவர் தமதுவேதனையை மறக்கவும், கடைசி உயிர்ப்பு உள்ளவரை



ராவ்பகதூர் சி. வை. தாமோதரம் பிள்ளை
பி. ஏ., பி. எல்.



இராமநாதபுரம் மகாராஜா மாக்ஷிமைதங்கிய

**பாஸ்கர சேதுபதி**

தமிழ்த்தாய்க்குப் பணிசெய்யவுமே பல நூல்கள் எழுதினராம். அவர் தம் மாணாக்கருள் ஒருவரும் திருப்புகழ்ப் பதிப்பாளர் ஸ்ரீ: வ. த. சுப்பிரமணிய பிள்ளையவர்கள் குமாரரும் ஆகிய ராவ்சாகிப். வ. சு. செங்கல்வுராய பிள்ளை எம். ஏ., அவர்கள், "அந்தோ! இத்தகையபெருமை வாய்ந்த புலவருக்குக் கடவுள் நீண்ட ஆயுள் கொடுக்கவில்லை. 1903-ஆம் வருடம், அவரது 33-வது வயதில் நோய்க் கிரையாகி, நாளுக்கு நாள் தேகம் இருமலினால் மெலிவடைந்து, 'ஐயா! இருமல் எம்முடன் பெருமல் செய்கிறதே' எனக் கூறி இருமிக்கொண்டே பாடம் சொல்லுவார். இறுதிநாள் வரையில் அவர் வீட்டில் தமிழ் முழக்கமே. அவர் பேசுவதை வியந்து கேட்பவர் ஒருபால்; அவர் எழுதின குறிப்புகளைப் பெயர்த்து எழுதுபவர் ஒருபால்; அவர் ஆணையின்படி நூல் எழுதுபவர் ஒருபால்; ஆக அவர் இல்லம் எப்பொழுதும் தமிழ் மகள் குலவி நடமிடு கோயிலாக விளங்கும்.

"தற்கால நாடகத் தமிழுக்குப் பிதா இவர் தானே! நாடக இலக்கணத்தை தமிழ் உலகிற்குத் தந்த புலவர் இவர்தானே! இவர் இயற்றிய கலாவதிக்கு நிகரான நாடகத்தமிழ் நூல் நானிலத்துண்டோ! இவருடைய தனிப்பாசுரத்தொகை போல் இனிப்பான நூலொன் றினிப் பாரிலுண்டோ? இவர் தம் மதிவாண நூலின் செந்தமிழ்ப் போல நெஞ்சிற் பதிவாகும் நூலொன்று வருமோ இனித்தான்? மானவிஜயம் போன்ற தேனமுத நூல்தான் தேடிற் கிடைக்குமோ? எழு

பது ஆண் டிருந்த ஒருவர் தமி ழணங்கிற்குச் செய் யும் திருப்பணி யெல்லாம் முப்பது ஆண்டில் முடித்த பெருந்தகை யல்லவோ? அவர் புகழ் ஞாயி றுள்ளளவும் நானிலத்திலகுமன்றோ?'' என்று கனிந்து கூறுகின்றார்.

இத்தகைய அருமை பெருமை வாய்ந்த சூரிய நாராயண, சாஸ்திரியார் தமிழ் மொழியன்றி வட மொழியும் ஒருங்கு கைவந்தவர்; அறிவு நூல் பயின்ற அருங் கலைக்குரிசில்; தருக்க நூல் வல்ல தண்டமிழ்வாணர்; நாடகக் கலையும் நடிப்புத் திறனும் நன்கமைந்த நற்குணச் செல்வர். தன் னலங் கருதாத் தகைமையாளர்; உண்மையே யென்றும் ஊக்கமாய் உரைப்பவர்.

இத்தகைய புலவர் தலைமணி, தமிழ்த்தாய்க்கு பணி செய்வதிலேயே அல்லும் பகலும் உழைத்து உயிரைத் தியாகம் செய்த அஞ்சா நெஞ்சர், சோப கிருது வருடம் ஐப்பசி மாதம் 17-ம் தேதி திங்கட் கிழமை (1903-ஆம் வருடம் நவம்பர் மாதம் 2-ஆம் தேதி) இறைவன் திருவடி சேர்ந்தார். இங்ஙனம் அளவுக்கு மிஞ்சிய உழைப்பை மேற்கொண்டிருந்த நம் புலவர் இன்னும் சில ஆண்டுகள் இருந்திருப் பின், நம் தமிழகத்துக்கு எத்துணையோ நலம் விளைந்திருக்கக்கூடும். அவர் இறந்த அன்று சென்னையில் சர்வகலாசாலையும், பல கல்லூரிகளும், கலாசாலைகளும் மூடப்பட்டன. மாணவர்களும் ஆசிரியர்களும் ஆயிரக்கணக்காய் சென்னை லிங்கச் செட்டித் தெருவில் கூடித் துக்கம் கொண்டாடி னர். இவர் தம் பூதவுடல் நீத்தபோதிலும், தமது




மதுரையம்பதி மகாவித்துவான்

**சு. சபாபதி முதலியார்**



ராவ்சாகிப்:

**சி. நா. சரவண முதலியார்**



ராவ்சாகிப்:

**ம. சோ. விசுவநாத முதலியார்**

தமிழ்ப் பணிகளால் புகழுடம் பெய்தி விளங்குகின்றனர் என்பது திண்ணம்.

## வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார்

# இயற்றிய நூல்கள்

| | | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|---|
| 1. | கலாவதி—ஓர் இனிய தமிழ் நாடகம் | 2 | 0 | 0 |
| 2. | நாடகவியல்—ஓர் நாடக இலக்கண நூல் | 1 | 8 | 0 |
| 3. | மான விஜயம்—ஓர் செய்யுள் நாடகம் | 1 | 8 | 0 |
| 4. | ரூபாவதி—ஓர் இனிய தமிழ் நாடகம் | 1 | 4 | 0 |
| 5. | பாவலர் விருந்து—செய்யுள் தொகுதி பல கொண்டது | 1 | 0 | 0 |
| 6. | தனிப்பாசுரத் தொகை—செய்யுள் தொகுதி பல கொண்டது | 1 | 0 | 0 |
| 7. | தமிழ்மொழியின் வரலாறு—தமிழ் மொழியின் சரித்திர-நூல் | 1 | 0 | 0 |
| 8. | தமிழ்ப் புலவர் சரித்திரம்—பல புலவர் சரிதையைக் கூறும் நூல் | 1 | 0 | 0 |
| 9. | மதிவாணன்—புதுவது புனைந்ததோர் செந்தமிழ்க் கதை | 0 | 12 | 0 |
| 10. | தமிழ் வியாசங்கள்—உயரிய பல வியாசங்கள் கொண்டது | 0 | 12 | 0 |
| 11. | மணியசிவனார் சரித்திரம் | 0 | 4 | 0 |

பிரசுரகர்த்தர்:

**வி. சூ. சுவாமிநாதன்**

மதராஸ் :: மதுரை :: திருநெல்வேலி

பதிப்புரிமை

விலை **0-2-0**